www.tamilarangam.net

# தப்பி வந்ததுபற்றி விளக்கம்

## மட்டகளப்பு சிறைஉடைப்பு நடந்ததுஎப்படி? பரபரப்பான பேட்டி

**சென்னை, ஜூலை 10- இலங்கை - மட்டக்களப்பு சிறையை உடைத்து - விடுதலைப் புலிகளால் விடுவிக்கப்பட்ட, ஈழ விடுதலைப் போராளி நிர்மலா இன்று சென்னையில் திடீர் என்று தோன்றி செய்தியாளர்களுக்குப் பேட்டி அளித்தார்.**



மட்டக்களப்பு சிறையை உடைத்து- விடுதலைப்புலிகள் இயக்கத்தைச் சார்ந்த போராளிகள்-ஈழவிடுதலைப் பெண்போராளி திருமதி நிர்மலாஅவர்களை மீட்டனர்; சிறை உடைத்து மீண்டு வந்த திருமதி நிர்மலா அவர்கள் இன்று சென்னையில் செய்தியாளர்களுக்கு பேட்டி அளித்தார். சிறை உடைப்பு நடந்தது எப்படி என்பதை அவர் விளக்கினார். நிர்மலா இது பற்றிக் கூறியதாவது:

கடந்த ஜூன் மாதம் 10 ம் தேதி இரவு 7-15 மணிக்கு விடுதலைப்புலிகளின் தாக்குதல் பிரிவைச் சார்ந்த விடுதலைப் போராளிகள்-பலத்த ஆயுதப் பாதுகாப்புடன் வந்து சேர்ந்தனர் அதில் சிலர்சிறைக்காவலாளிகளைப்போல உடை அணிந்திருந்தனர்சிறைக்குவெளியே முக்கியமான இடங்களில் விடுதலைப்புலிகள் பாதுகாப்புக்காக நிறுத்தப்பட்டனர்

### சிறை உடைப்பு

உடனே விடுதலைப்புலிகள் சிறைக் கதவை உடைத்தனர்; தாக்க வந்த காவலாளிகள் மீது எதிர்தாக்குதல் நடத்தி, அவர்களை அடக்கினர்.

இந்த தாக்குதலில் இரண்டு சிறைக்காவலர்கள் பலத்த காயமடைந்தனர். மற்ற காவலாளிகள் அஞ்சி நடுங்கி ஓட்டம் பிடித்தனர்.

பிறகு- விடுதலைப்புலிகள் சிறையில் பெண்கள் அடைக்கப்பட்டிருந்த பகுதிக்கு வந்தனர். நான் அடைக்கப்பட்டிருந்த 'செல்' அறையின் சாவி எங்கே இருக்கிறது என்பது தெரியவில்லை. உடனே விடுதலைப் புலிகள் அந்தப் பூட்டையும் உடைத்தனர். நான் வெளியே வந்து விட்டேன்.

என்று நிர்மலா தான் தப்பியமுறையை விளக்கினார் விடுதலை புலிகள். நடத்தி வரும் கொரில்லா போராட்டத்தில்-இந்தசிறைஉடைப்பு குறிப்பிடத்தக்க வரலாற்றுச் சிறப்பாகும் 1982ஆம் ஆண்டு நவம்பர் மாதம் நிர்மலாகைது செய்யப்பட்டதைதொடர்ந்து அது தொடர்பான அரசியல் சர்ச்சைகள் எழுந்தன.

சிங்கள பேரினவாத அரசின் கொடுமையானபயங்கரவாதிகள் தடுப்புச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட முதல் பெண் திருமதி நிர்மலா அவர்கள் ஆவார்கள்.

### தனிமைச்சிறை

சிறையில் தாம் நடத்தப்பட்ட விதத்தை திருமதி நிர்மலா செய்தியாளர்கள்கேட்டபோது விவரித்தார் தூக்குத் தண்டனை அளிக்கப்பட்டுள்ள கைதிகளை அடைக்கும் கொட்டடியில் நான் அடைத்து வைக்கப்பட்டிருந்தேன்; என்னுடைய ஒவ்வொரு நடவடிக்கைகளும் கண்காணிக்கப்பட்டு பதிவு செய்யப்பட்டன. வெளி உலகத் தொடர்புகள் அறவே துண்டிக்கப்பட்டு விட்டன. என்றார் நிர்மலா.

அமெரிக்க தம்பதிகள் இருவர் பணயக் கைதிகளாக ஒரு அமைப்பினால் பிடிக்கப்பட்ட போது இலங்கை வானொலி திருமதி நிர்மலா அவர்களின் பதிவு செய்தகுரலைஒலிபரப்பியது; அந்த பிணயக் கைதிகளை விடுதலை செய்யுமாறு நிர்மலா அதில் கோரியிருந்தார். இது நீங்களாகவேமுன் வந்து செய்ததா? அல்லது அரசாங்கம் கட்டாயப்படுத்தியதா என்று கேட்டபோது "நாங்களாகவே முன்வந்து தான் அப்படி கூறினோம் இரண்டு உயிர்கள் பலியாக வேண்டாம் என்று நினைத்தேன்" என்று நிர்மலா கூறினார்.

### அகதியாக

தொடர்ந்து விடுதலைப் போராட்டத்தில் உங்கள் பங்கு என்ன என்று செய்தியாளர்கள் கேட்டபோது நான் பல்லாயிரக்கணக்கான அகதிகளில் ஒருவராகத்தான் தமிழகம் வந்திருக்கிறேன். மனிதஉரிமைகளுக்காக பாடுபடுவேன்" என்று கூறினார்

திருமதி 'நிர்மலா' 1976ம் ஆண்டு முதல் யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்திலும் ஆசிரியையாக பணியாற்றி வந்தவர் பிறகு தனது வேலையை ராஜினாமா செய்துவிட்டு ஈழவிடுதலைப் போரில் தன்னை அர்ப்பணித்துக் கொள்ள முன் வந்தார்.

பெண்களின் விடுதலைக்கும் ஈழவிடுதலைக்கும தன்னை ஒப்படைத்துக் கொண்ட புரட்சிப் போராளி திருமதி நிர்மலா என்று விடுதலைப்புலிகள் இயக்கம் வெளியிட்டுள்ள செய்தி குறிப்பிடுகிறது.

தனது கணவர் பேராசிரியர் நித்தியானந்தம் அவர்களுடன் 1982ம் ஆண்டு நவம்பர் 20ம்தேதி அவர் கைது செய்யப்பட்டார்.

தாக்குதலில் படுகாயமடைந்த விடுதலைப் புலிகளுக்கு - இவர்கள் அடைக்கலம் கொடுத்தார்கள் என்பதற்காக இவர்கள் இலங்கை அசரால் கைது செய்யப்பட்டனர். வெளிக்கடை சிறையில் விடுதலைப் போராளிகள்-சிங்கள வெறியர்களால் படுகொலை செய்யப்பட்ட பிறகு அதில் உயிர் தப்பிய நிர்மலா. மட்டக்களப்பு சிறைக்கு மாற்றப்பட்டார்;

ஏற்கனவே மட்டக்களப்பு சிறையிலிருந்து-ஒரு விடுதலை அமைப்பினரால் கைதிகள் விடுவிக்கப்பட்டதுபற்றி நிர்மலா குறிப்பிடுகையில்- "அது சிறை உடைப்புஎன்று சொல்ல முடியாது.

அப்போது சிறை அதிகாரிகளாக இருந்தவர்கள் தமிழர்கள்; சிறையை திறந்து வெளியே வந்தார்கள்; இப்போது நடந்திருப்பது தான் உண்மையான சிறை உடைப்பு இப்போது மட்டக்களப்பு சிறையில் அதிகாரிகள் ஊழியர்களாக இருந்தவர்கள் அனைவரும்சிங்களர்களே" என்றார் நிர்மலா.

கலை இலக்கியத்துறையில் நிர்மலா மிகவும் ஈடுபாடு உடையவர்; பிறமொழி இலக்கியங்கள் தாயக விடுதலை வலியுறுத்தும் நாடகங்களை தமிழில் மொழி பெயர்த்து தமிழிலே நடத்தி தமிழர்களிடையே கலையின் மூலம் விடுதலை வேட்கையைத் தூண்டி விட்டவர்;

தனிமைச் சிறையில் அடைக்கப்பட்டு மிகப் பெரிய சங்கடங்களுக்கு ஆட்படுத்தப்பட்டாலும், நிர்மலா உற்சாகமாகவே காணப்பட்டார்; செய்தியாளர்கள் கேட்ட கேள்விகளுக்கு ஆங்கிலத்திலும் தமிழிலும் சரமாரியாக பதிலளித்தார்.

தனிமைச் சிறையில் அடைக்கப்பட்டு ஆஸ்துமா நோயினால் கடும் அவதிப்பட்ட நேரத்தில் கூட உலகம் முழுவதுமிருந்தும் மனித உரிமை இயக்கங்கள். நிர்மலாவை மனிதாபிமான அடிப்படையில் விடுதலை செய்யுமாறு வற்புறுத்திய போதும், சிங்களப் பேரினவாத அரசு அவரை விடுதலை செய்ய மறுத்தது!

சிறையிலிருந்து தப்பி [illegible] சேரும் வரை தனது பயணம் மிக ஆபத்தானதாக இருந்தது என்று நிர்மலா குறிப்பிட்டார்.

பேட்டியின் போது-பேராசிரியர் நித்தியானந்தம் விடுதலைப்புலிகளின் அரசியல் பிரிவைச்சார்ந்த டாக்டர்பாலசிங்கம் சுப்ரமணியம் ஆகியோரும் உடன் இருந்தனர்

[விடுதலைப்புலிகள் இயக்கத்தின் சார்பில் அளிக்கப்பட்ட மற்ற பேட்டி விவரம் நாளை].

### பரபரப்பு

சென்னையில் திருமதி நிர்மலா இன்று திடீர் என்று பத்திரிகையாளரைச் சந்தித்த செய்தி, மிகவும் பரபரப்பாக இருந்தது; 31 வயதுடைய நிர்மலா,ஈழவிடுதலைக்காகப் போராடும விடுதலைப்புலிகள் இயக்கத்தின் தீவிரமான ஆதரவாளர் அரசியல் விஞ்ஞானத்துறையில் Pojitical Science விரிவுரையாளராக இருந்த நிர்மலா இலங்கை கடற்படையின் கடுமையான கண்காணிப்பையும் முறியடித்து கடல் மார்க்கமாக சென்னை வந்து சேர்ந்து விட்டார்; அவர் எப்படி சென்னை வந்து சேர்ந்தார் என்ற விவரங்களை செய்தியாளர்கள் கேட்டபோது, அவர் பதிலளிக்க மறுத்து விட்டார்;

### வழக்கு தள்ளுபடி

சென்னை, ஜூலை 10- நுழைவுத்தேர்வு முறையை எதிர்த்து வட சென்னை மாவட்ட கழக தலைவர் க,பலராமன் தொடர்ந்த வழக்கை நீதிபதி எஸ் நடராசன்இன்று அனுமதி மறுத்து தள்ளுபடி செய்துவிட்டார்.

### பொதுச் செயலாளர் விடுக்கும் செய்தி



நியூயார்க் நகரில் நடைபெற்ற தமிழர் மாநாட்டில் கலந்து கொண்டதிராவிடர் கழகப் பொதுச்செயலாளர் மான மிகு கி. வீரமணி அவர்கள், அடுத்து அந்நாட்டில் பல் வேறு நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டு வருகிறார்கள்.

நேற்று தொலைபேசி மூலம் 'விடுதலை' அலுவலகத்துக்கு தொடர்பு கொண்டார்கள்.

நுழைவுத்தேர்வு பற்றிய நிலைகளை விசாரித்தார்கள் வழிநடைப் பயணம் 13ஆம் தேதி பொதுக்கூட்டம்-பேரணிகள் சிறப்பாக அமைய கழகத் தோழர் கடுமையாக உழைக்குமாறு கேட்டுக்கொண்டார்.

கழகத்தின் ஒவ்வொரு அசைவும் நுழைவுத்தேர்வு ஒழித்துக் கட்டுவதில்தான் இருக்கவேண்டும் என அறிவுறுத்தினார்கள்.

**முத்தாரம்**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தப்பி வந்ததுபற்றி விளக்கம்

## மட்டகளப்பு சிறைஉடைப்பு நடந்ததுஎப்படி? பரபரப்பான பேட்டி

**சென்னை, ஜூலை 10- இலங்கை - மட்டக்களப்பு சிறையை உடைத்து - விடுதலைப் புலிகளால் விடுவிக்கப்பட்ட, ஈழ விடுதலைப் போராளி நிர்மலா இன்று சென்னையில் திடீர் என்று தோன்றி செய்தியாளர்களுக்குப் பேட்டி அளித்தார்.**



மட்டக்களப்பு சிறையை உடைத்து- விடுதலைப்புலிகள் இயக்கத்தைச் சார்ந்த போராளிகள்-ஈழவிடுதலைப் பெண்போராளி திருமதி நிர்மலாஅவர்களை மீட்டனர்; சிறை உடைத்து மீண்டு வந்த நிர்மலா அவர்கள் இன்று சென்னையில் செய்தியாளர்களுக்கு பேட்டி அளித்தார். சிறை உடைப்பு நடந்தது எப்படி என்பதை அவர் விளக்கினார். நிர்மலா இது பற்றி கூறியதாவது:

கடந்த ஜூன் மாதம் 10 ம் தேதி இரவு 7-15 மணிக்கு விடுதலைப்புலிகளின் தாக்குதல் பிரிவைச் சார்ந்த விடுதலைப் போராளிகள்-மக்கள் ஆயுதப் பாதுகாப்புடன் வந்து சேர்ந்தனர் அதில் சிலர்சிறைக்காவலாளிகள்போல உடை அணிந்திருந்தனர்சிறைக்குவெளியே முக்கியமான இடங்களில் விடுதலைப்புலிகள் பாதுகாப்புக்காக நிறுத்தப்பட்டனர்

### சிறை உடைப்பு

உடனே விடுதலைப்புலிகள் சிறைக் கதவை உடைத்தனர்; தாக்க வந்த காவலாளிகள் மீது எதிர்தாக்குதல் நடத்தி, அவர்களை அடக்கினர்.

இந்த தாக்குதலில் இரண்டு சிறைக்காவலர்கள் பலத்த காயமடைந்தனர். மற்ற காவலாளிகள் அஞ்சி நடுங்கி ஓட்டம் பிடித்தனர்.

பிறகு- விடுதலைப்புலிகள் சிறையில் பெண்கள் அடைக்கப்பட்டிருந்த பகுதிக்கு வந்தனர். நான் அடைக்கப்பட்டிருந்த 'செல்' அறையின் சாவி எங்கே இருக்கிறது என்பது தெரியவில்லை. உடனே விடுதலைப் புலிகள் அந்தப் பூட்டையும் உடைத்தனர். நான் வெளியே வந்து விட்டேன்.

என்று நிர்மலா தான் தப்பிய முறையை விளக்கினார்

விடுதலை புலிகள். நடத்தி வரும் கொரில்லா போராட்டத்தில்-இந்தசிறைஉடைப்பு குறிப்பிடத்தக்க வரலாற்றுச் சிறப்பாகும் 1982ஆம் ஆண்டு நவம்பர் மாதம் நிர்மலாகைது செய்யப்பட்டதைதொடர்ந்து அது தொடர்பான அரசியல் சர்ச்சைகள் எழுந்தன.

சிங்கள பேரினவாத அரசின் கொடுமையானபயங்கரவாதிகள் தடுப்புச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட முதல் பெண் திருமதி நிர்மலா அவர்கள் ஆவார்கள்.

### தனிமைச்சிறை

சிறையில் தாம் நடத்தப்பட்ட விதத்தை திருமதி நிர்மலா செய்தியாளர்கள்கேட்டபோது விவரித்தார் தூக்குத் தண்டனை அளிக்கப்பட்டுள்ள கைதிகளை அடைக்கும் கொட்டடியில் நான் அடைத்து வைக்கப்பட்டிருந்தேன்; என்னுடைய ஒவ்வொரு நடவடிக்கைகளும் கண்காணிக்கப்பட்டு பதிவு செய்யப்பட்டன. வெளி உலகத் தொடர்புகள் அறவே துண்டிக்கப்பட்டு விட்டன. என்றார் நிர்மலா.

அமெரிக்க தம்பதிகள் இருவர் பணயக் கைதிகளாக ஒரு அமைப்பினால் பிடிக்கப்பட்ட போது இலங்கை வானொலி திருமதி நிர்மலா அவர்களின் பதிவு செய்தகுரலைஒலிபரப்பியது; அந்த பிணயக் கைதிகளை விடுதலை செய்யுமாறு நிர்மலா அதில் கோரியிருந்தார். இது நீங்களாகவேமுன் வந்து செய்ததா? அல்லது அரசாங்கம் கட்டாயப்படுத்தியதா என்றுகேட்டபோது "நாங்களாகவே முன்வந்து தான் அப்படி கூறினோம் இரண்டு உயிர்கள் பலியாக வேண்டாம் என்று நினைத்தேன்" என்று நிர்மலா கூறினார்.

### அகதியாக

தொடர்ந்து விடுதலைப் போராட்டத்தில் உங்கள் பங்கு என்ன என்று செய்தியாளர்கள் கேட்டபோது நான் பல்லாயிரக்கணக்கான அகதிகளில் ஒருவராகத்தான் தமிழகம் வந்திருக்கிறேன். மனிதஉரிமைகளுக்காக பாடுபடுவேன்" என்று கூறினார்

திருமதி 'நிர்மலா' 1976ம் ஆண்டு முதல் யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்திலும் ஆசிரியையாக பணியாற்றி வந்தவர் பிறகு தனது வேலையை ராஜினாமா செய்துவிட்டு ஈழவிடுதலைப் போரில் தன்னை அர்ப்பணித்துக் கொள்ள முன் வந்தார்.

பெண்களின் விடுதலைக்கும் ஈழவிடுதலைக்கும் தன்னை ஒப்படைத்துக் கொண்ட புரட்சிப் போராளி திருமதி நிர்மலா என்று விடுதலைப்புலிகள் இயக்கம் வெளியிட்டுள்ள செய்தி குறிப்பிடுகிறது.

தனது கணவர் பேராசிரியர் நித்தியானந்தம் அவர்களுடன் 1982ம் ஆண்டு நவம்பர் 20ம்தேதி அவர் கைது செய்யப்பட்டார்.

தாக்குதலில் படுகாயமடைந்த விடுதலைப் புலிகளுக்கு - இவர்கள் அடைக்கலம் கொடுத்தார்கள் என்பதற்காக இவர்கள் இலங்கை அரசால் கைது செய்யப்பட்டனர். வெளிக்கடை சிறையில் விடுதலைப் போராளிகள்-சிங்கள வெறியர்களால் படுகொலை செய்யப்பட்ட பிறகு அதில் உயிர் தப்பிய நிர்மலா. மட்டக்களப்பு சிறைக்கு மாற்றப்பட்டார்;

ஏற்கனவே மட்டக்களப்பு சிறையிலிருந்து-ஒரு விடுதலை அமைப்பினரால் கைதிகள் விடுவிக்கப்பட்டதுபற்றி நிர்மலா குறிப்பிடுகையில்- "அது சிறை உடைப்புஎன்று சொல்ல முடியாது.

அப்போது சிறை அதிகாரிகளாக இருந்தவர்கள் தமிழர்கள்; சிறையை திறந்து வெளியே வந்தார்கள்; இப்போது நடந்திருப்பது தான் உண்மையான சிறை உடைப்பு இப்போது மட்டக்களப்பு சிறையில் அதிகாரிகள் ஊழியர்களாக இருந்தவர்கள் அனைவரும்சிங்களர்களே" என்றார் நிர்மலா.

கலை இலக்கியத்துறையில் நிர்மலா மிகவும் ஈடுபாடு உடையவர்; பிறமொழி இலக்கியங்கள் தாயக விடுதலை வலியுறுத்தும் நாடகங்களை தமிழில் மொழி பெயர்த்து தமிழிலே நடத்தி தமிழர்களிடையே கலையின் மூலம் விடுதலை வேட்கையைத் தூண்டி விட்டவர்;

தனிமைச் சிறையில் அடைக்கப்பட்டு மிகப் பெரிய சங்கடங்களுக்கு ஆட்டுடுத்தப்பட்டாலும், நிர்மலா உற்சாகமாகவே காணப்பட்டார்; செய்தியாளர்கள் கேட்ட கேள்விகளுக்கு ஆங்கிலத்திலும் தமிழிலும் சரமாரியாக பதிலளித்தார்.

தனிமைச் சிறையில் அடைக்கப்பட்டு ஆஸ்துமா நோயினால் கடும் அவதிப்பட்ட நேரத்தில் கூட உலகம் முழுவதுமிருந்தும் மனித உரிமை இயக்கங்கள். நிர்மலாவை மனிதாபிமான அடிப்படையில் விடுதலை செய்யுமாறு வற்புறுத்திய போதும், சிங்களப் பேரினவாத அரசு அவரை விடுதலை செய்ய மறுத்தது!

சிறையிலிருந்து தப்பி இங்கே சென்னை வரை தனது பயணம் மிக ஆபத்தானதாக இருந்தது என்று நிர்மலா குறிப்பிட்டார்.

பேட்டியின் போது-பேராசிரியர் நித்தியானந்தம் விடுதலைப்புலிகளின் அரசியல் பிரிவைச்சார்ந்த டாக்டர்பாலசிங்கம் சுப்ரமணியம் ஆகியோரும் உடன் இருந்தனர்

[விடுதலைப்புலிகள் இயக்கத்தின் சார்பில் அளிக்கப்பட்ட மற்ற பேட்டி விவரம் நாளை].

### பரபரப்பு

சென்னையில் திருமதி நிர்மலா இன்று திடீர் என்று பத்திரிகையாளரைச் சந்தித்த செய்தி, மிகவும் பரபரப்பாக இருந்தது; 31 வயதுடைய நிர்மலா,ஈழவிடுதலைக்காகப் போராடும விடுதலைப்புலிகள் இயக்கத்தின் தீவிரமான ஆதரவாளர் அரசியல் விஞ்ஞானத்துறையில் Political Science விரிவுரையாளராக இருந்த நிர்மலா இலங்கை கடற்படையின் கடுமையான கண்காணிப்பையும் முறியடித்து கடல் மார்க்கமாக சென்னை வந்து சேர்ந்துவிட்டார்; அவர் எப்படி சென்னை வந்து சேர்ந்தார் என்ற விவரங்களை செய்தியாளர்கள் கேட்டபோது, அவர் பதிலளிக்க மறுத்து விட்டார்;

---

### வழக்கு தள்ளுபடி

சென்னை, ஜூலை 10- நுழைவுத்தேர்வு முறையை எதிர்தது வட சென்னை மாவட்ட கழக தலைவர் க,பலராமன் தொடர்ந்த வழக்கை நீதிபதி எஸ் நடராசன் இன்று அனுமதி மறுத்து தள்ளுபடி செய்துவிட்டார்.

---

### பொதுச் செயலாளர் விடுக்கும் செய்தி



நியூயார்க் நகரில் நடைபெற்ற தமிழர் மாநாட்டில் கலந்து கொண்டதிராவிடர் கழகப் பொதுச்செயலாளர் மான மிகு கி. வீரமணி அவர்கள், அடுத்து அந்நாட்டில் பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டு வருகிறார்கள்.

நேற்று தொலைபேசி மூலம் 'விடுதலை' அலுவலகத்துக்கு தொடர்பு கொண்டார்கள்.

நுழைவுத்தேர்வு பற்றிய நிலைகளை விசாரித்தார்கள் வழிநடைப் பயணம் 13ஆம் தேதி பொதுக்கூட்டம்-பேரணிகள் சிறப்பாக அமைய கழகத் தோழர் கடுமையாக உழைக்குமாறு கேட்டுக்கொண்டார்.

கழகத்தின் ஒவ்வொரு அசைவும் நுழைவுத்தேர்வை ஒழித்துக் கட்டுவதில்தான் இருக்கவேண்டும் என அறிவுறுத்தினார்கள்.

---

**முத்தாரம்**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்